2nd Copy 17,10,67     Translated

1.

## நாவிதன் கதை :

கதை சொல்லியது
House No 31 உடையாரின் மகன்
K. கோபாலன்

ஒரு சின்ன ஊர் இருந்தது. அந்த ஊரில் ஒரு நாசுவன் இருந்தான். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். மகன் பெயர் "செல்லப்பன்." செல்லப்பனுக்கு வயசு இருபத்தி ஐந்து (25) ஆகிறது. இன்னும் கல்யாணமாகவில்லை. செல்லப்பன் ரொம்பவும் அறிவுள்ளவன். ஆனால், ரொம்பவும் ஏழை! இப்படியிருக்கும் போது அந்த ஊரில் இருந்த ராஜாவுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் ஆடல், பாடல், கல்வி இவைகளில் மிகவும் உயர்ந்து விளங்கினாள். அவளுக்கு வயது இருபத்தி ஒன்று (21) ஆகிறது. ரொம்பவும் அழகி! பெயர் "மரகதம்!" கல்யாணம் இன்னும் ஆகவில்லை.

அப்படியிருக்கும் காலத்தில் ராஜாவானவர் "என் மகளை கல்யாணம் செய்து கொள்ள வருகிறவர்கள் அவள் கேட்கும் மூன்று கேள்விகளுக்கும் பதில் கொடுக்க வேண்டும்! சரியான பதில் கொடுத்தவர்களுக்கு என் மகள் ராஜகுமாரியையும் கல்யாணம் செய்து கொடுத்து என்னுடைய ராஜ்ஜியத்தில் (நாட்டில்) பாதி கொடுப்பேன்! மூன்று கேள்விகளுக்கும் பதில் சொல்லத் தவறினால் பத்து வருஷ கடுங்காவல் தண்டனை கொடுத்து ஜெயிலில் போட்டு அடைத்து விடுவேன்" என்று ஊர் முழுவதும் பறைசாற்றினார்கள்.

அதன்படியே எல்லோரும் அரண்மனைக்கு வந்து ராஜகுமாரி கேட்ட கேள்விகளுக்கு சரியான பதில் சொல்ல முடியாமல் சிறையில் அடைக்கப் பட்டார்கள். இப்படியாக தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது பேர் (999) சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஆயிரம் பேருக்கு இன்னும் ஒரு ஆள்தான் இல்லை.

அச்சமயம் நாசுவன் செல்லப்பன் அரண்மனைக்குப் போனான். போகும் போது அவனுடைய தகப்பனாரானவர் மகனிடம் "செல்லப்பா! இடும்பாக கேள்வி கேட்டால் இடும்பாக பதில் சொல்லு. நல்ல கேள்வி கேட்டால் நல்லபதில் சொல்லு!" என்றார்.

அதற்கு செல்லப்பன் சரியென்று சொல்லிவிட்டு அரண்மனைக்குப் போனான். அங்கு அரசனும் அவர் மகளும் இருந்தார்கள். செல்லப்பன் போனதும் அவர்களை வணங்கி விட்டு "உங்கள் கேள்வியைக் கேளுங்கள்!" என்றான். அதைக் கேட்ட ராஜகுமாரியானவள் "1, புலியின் பால் கொண்டு வரவேண்டும். 2, உலகத்தின் மையம் எது?, 3, வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன?" என்று மூன்று கேள்வியும் கேட்டாள்.

அதற்கு செல்லப்பன் "சரி! ஒருவாரம் பொறுத்துக் கொள்ளுங்கள் இதற்கெல்லாம் பதில் கொண்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து ஒரு சிநேகிதன் வீட்டுக்குச் சென்று அங்கு ஒருவாரம் இருந்து கொண்டான். சரியாக ஒருவாரம் முடியும் போது செல்லப்பனவன் ஒரு பாட்டலில் ஆட்டுப்பால், கழுதைப்பால், நாய், பூனை ஆகியவைகளின் பாலை பாட்டில் நிறைய கறந்து கொண்டு, ஒரு கூடையில் ஆற்று மணலை நிறைய எடுத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான். அரசர் அவனைக் கண்டதும் "மூன்று கேள்விக்கும் பதில் கொண்டு வந்தாயா?" என்று கேட்டார்.

அதற்கு செல்லப்பன் "ஆம் அரசே கொண்டு வந்தேன்! என்று பாட்டலில் கொண்டு வந்த பாலை எடுத்து இது தான் புலிப்பால்!" என்று அரசர் முன்பு வைத்தான்.

அதைக்கண்ட அரசர் "இது புலிப்பால் என்பதற்கு என்ன அத்தாட்சி? (ஆதாரம்)" என்று கேட்டார்.

அதற்கு செல்லப்பன் "உங்களுக்கு சந்தேகமிருந்தால் நீங்கள் வேறு புலிப்பால் கொண்டு வந்து இரண்டையும் பரிசோதனை செய்து பாருங்கள்!" என்றான்.

அரசனால் புலிப்பால் கொண்டு வர முடியாததனால் "அது புலிப்பால்தான்" என்று ஒப்புக் கொண்டார்.

பிறகு, கூடையில் கொண்டு வந்த மணலை எடுத்து அரசர்முன் கீழே போட்டு "இத்தனை நட்சத்திரங்கள் வானத்தில் இருக்கிறது! உங்களுக்கு சந்தேகமிருந்தால் எண்ணிப் பாருங்கள்!" என்றான்.

அதைக் கண்ட அரசர் எண்ணிப்பார்க்க முடியாததால் அதையும் "சரி" யென்று ஒப்புக் கொண்டார்.

பிறகு, செல்லப்பனானவன் அரசரை நோக்கி "அரசே! உலகத்தின் மையமான இடம் நீங்கள் உட்கார்ந்திருக்கும் இடம்தான் அதிலும் உங்களுக்கு சந்தேகம் இருந்தால் இரண்டு திசையிலும் ஆள்விட்டு சரியாக இருக்கிறதா என்று பாருங்கள்" என்றான்.

அதுவும் முடியாதென்று நினைத்த அரசர் "அதுவும் சரி" யென்று ஒப்புக் கொண்டார். பிறகு அரசர் தன்னுடைய நிபந்தனைப்படி தன் மகளை நாசுவன் செல்லப்பனுக்கு கல்யாணம் செய்து கொடுத்து தன்னுடைய ராஜ்ஜியத்திலும் பாதியை செல்லப்பனுக்கு கொடுத்துவிட்டார்.

நாசுவன் செல்லப்பனும், அரசன் மகள் மரகதமும் கல்யாணம் செய்து கொண்டு சுகமாக வாழ்கிறார்கள்.

முற்றும்